Addic/IN/4962/27-9-23

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மாணவர் உதவி மற்றும் முன்னேற்ற மையம்

## சுற்றறிக்கை

AU/SSP/H/2023. நாள்: 20/09/2023

பொருள்: ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் கல்வி மேம்பாட்டிற்காக போஸ்ட் மெட்ரிக் க்ல்வி உதவித் தொகை திட்டம் இணையதளம் மூலம் அக்டோபர் மாதத்தில் தொடங்கபடஉள்ளது - தொடர்பாக.

அண்ணாமலை பல்கலைகழகத்தில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருஸ்துவ ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. 2023-2024 ஆம் கல்வியாண்டின் இக்கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கான இணையதளம் அக்டோபர் மாதத்தில் தொடங்கபட உள்ளது. எனவே, இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் ஆதார், சாதி சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழ் ஆகியவற்றை தயார்நிலையில் வைத்திருக்குமாறும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளை பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1) சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்று ஆகியவை இணைய சான்றுகளாக இருத்தல் அவசியம். இணைய சான்றுகளை பெற அருகில் உள்ள இ - சேவை மையமங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.
2) ஆதாரில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும், இல்லை என்றால் சரியான விவரங்களை திருத்திக்கொள்ள வேண்டும்.
3) மாணவரின் வங்கிக்கணக்கு எண் ஆதாருடன் இணைக்கபட்டிருக்க (seeding) வேண்டும்.
4) ஆதாருடன் இணைக்கப்பட்ட (seeding) வங்கிகணக்கு எண் செயல்பாட்டில் (active) இருக்க வேண்டும்.
5) ஆதாருடன் வங்கி கணக்கு இணைக்கபட்டிருகிறதா என்ற விவரத்தினை உறுதிபடுத்த http://resident.uidai.gov.in/bank-mapper என்ற இணைய முகவரியை பயன்படுத்திகொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
6) ஆதாருடன் வங்கிக்கணக்கினை இணைக்கதவர்கள் சம்பத்தப்பட்ட வங்கிகளை அணுகி ஆதார் என்னை இணைக்க வேண்டும்.

இவ்விவரங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து ஆவணங்களை தயார்நிலையில் வைத்திருக்க உதவிடுமாறு அனைத்து புலமுதல்வர்கள், துறை தலைவர்கள், ,மாணவ உதவி மற்றும் முன்னேற்ற மையம் ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்

**பெறுதல்**

1. அனைத்து புலமுதல்வர்கள்
2. அனைத்து துறை தலைவர்கள் ( சுற்றறிக்கை அறிவிப்பு பலகை வாயிலாக மற்றும் வகுப்பறையில் படித்தும் மாணவ/மாணவியர்களுக்கு தெரிவிக்க வலியுறுத்தப்படுகிறது )
3. தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி
4. இயக்குநர் கல்வி ஆராய்ச்சி (DARE)
5. இயக்குநர்,அண்ணாமலை எண்ணியல் தகவல் மையம்
6. ஒருங்கிணைப்பாளர்கள், மாணவ உதவி மற்றும் முன்னேற்ற மையம்
7. விடுதி ஒருங்கிணைப்பாளர்
8. விடுதி காப்பாளர் (சுற்றறிக்கை அறிவிப்பு பலகை வாயிலாக மாணவ/மாணவியர்களுக்கு தெரிவிக்க வலியுறுத்தப்படுகிறது)

**நகல்**

1. துணைவேந்தரின் நேர்முக செயலாளர்
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3. அலுவலக கோப்பு